உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 356

புத்-அஅ] யாழ்ப்பாணம்: நள ஞு வைகாசி மீ க-உ வெள்ளிக்கிழமை (14-5-1976) [இல: சு

## புராண படனத்தின் பொழிப்பு

### கந்த புராணம் தரும் காருண்யம்

[யாழ். அனைத்திலங்கைச் சைவமாமன்ற இல்லத்தில் கந்தபுராண படன நிகழ்ச்சிகளின் போது வித்துவான ந. சுப்பையாபிள்ளை அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி]

உலக சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியம் புரிந்தருளும் பரசிவன் உயிர்களுக்கு மலபரிபாகம் வருவித்தற் பொருட்டு படிப்படியாக வினைகளைப் புசிப்பித்துப் போக்கி, சிவஞானம் முத்தி யிவைகளை ஈந்தருளுகின்றார் அவரே கலியுகத்திலே தம்மைச் சரணம் புக்க மக்களுக்கு வினைகளை விரைவில் நீக்கிச் சிவஞானத்தையும் முத்திநிலையினையும் வேண்டியாங்கு ஈந்தருளும் பொருட்டாக, தாம் ஐந்து முகத்தோடு அதோமுகமும் பொருந்தி ஆறுமுகத்தராக வீற்றிருந்து, தம் ஆறு நெற்றிக்கண்களினின்றும் தோற்றுவித்த ஆறு தீப்பொறிகளால் உற்பவிக்கச் செய்த மூர்த்தமே ஆறுமுகக் கடவுளாகிய முருகன்.

இம் மூர்த்தம் (வடிவம்) தோற்றுவதற்கு ஏதுவாகிய இவ்வுண்மையினை, உலகாயத நெறிநின்று பொதுமகளிரின் கூட்டுறவால் பெருங்கடு நோயுற்று வருந்திய அருணகிரிநாதர், ஆறுமுகவேலரைச் சரணம் புக்குத்தவங்கிடந்து அவரருளாலே தமது நோய் நீங்கி, அவரால் ஞானோபதேசமும் பெற்று நிஷ்டாநுபூதிமான் ஆயினார் என்ற வரலாற்றினால் அறியலாம். அவர் பாடிய "கூறுமடியார்கள் வினைதீர்க்குமுகமொன்றே" என்ற திருப்புகழ் அதற்குச் சான்றாக நிலவுகின்றது. இன்னும் முருகனருளால் வரகவியாய் விளங்கிய குமரகுருபர சுவாமிகளின் வரலாறு போல்வன பலசான்றுகளும் உண்டு.

இப்படிப்பட்ட ஸ்ரீ கந்தப் பெருமானை நாமும் சரண்புக்குப் பூசைவிரதம் முதலிய வழிபாடுகள் செய்து தவங்கிடந்தால், நாம் இஷ்டசித்திகளைப் பெறலாம். ஆனால், நாம் உலக வாழ்க்கையின் பொருட்டுப் பலவிதசீவியத் தொழில்களில் ஈடுபட்டிருப்பதால், அருணகிரிநாதர் முதலாயினார் போலத் தவங்கிடத்தல் எமக்கு இயலாது; அதற்கு என் செய்யலாம் எனில், முருகக்கடவுளின் எண்ணில்லாத மகிமைகளை விரித்துக் கூறும் கந்தபுராணத்தைப் பக்தி விசுவாசத்துடன் படித்தும், கேட்டும், படிப்பித்தும், கேட்பித்தும் செய்துவந்தால், எம்மனோர் இடர்களின் நீக்கமும் இஷ்ட சித்திப் பேறுகளும் எய்தல் இயலும். எம் முன்னோர் இவ்வாறு செய்து விரும்பிய பேறுகளைப் பெற்றார்கள் என்பதையும் கேட்டறிந்துள்ளோம். இப்படிப்பட்ட கந்தபுராண படனம் சைவப்புரவலர் திரு. வே. கந்தசாமி அவர்களால் முன்பும் ஒருமுறை கொட்டடி ஸ்ரீ பால ஞான வைரவர் கோவிலில் நடாத்தப்பட்டது. இரண்டாம் முறையாக இப்பொழுதும் அவரே முதன்மை நிர்வாகஸ்தராக இருந்து, கந்தபுராண படன நிகழ்ச்சிக்குழுவின் சார்பில் நடாத்த முற்பட்டுள்ளார்.

இம் முறைக் கந்தபுராண படன நிகழ்ச்சி யாழ். கொட்டடி அனைத்திலங்கைச் சைவ மன்றத்தில்லத்திலே 30 4-76 வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு ஆரம்பிக்கவும், மறுநாள் தொடக்கம் தினமும் மாலை 6-30 மணிமுதல் இரவு 8-30 மணிவரையில் நடைபெறவும் திருவருள் கைகூட்டியுள்ளது.

இப்புண்ணிய கைங்கரியம் நிறைவேறவும் சைவப் புரவலர் திரு. வே. கந்தசாமி அவர்கள் மேலும் இத்தகைய கைங்கரியங்களைச் செய்து இன்புற்று நீடுவாழவும் இவருக்குப் பக்கபலமாகத் துணைபுரியும் அறப்பணிக்காவலர் திரு. வே. சபாபதிப்பிள்ளை அவர்களும் பண்ணிசையாசிரியர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்களும் மேலும் உறுதுணையாக நின்று உதவி இன்புற்று இனிது நீடுவாழவும் கலியுக வரதராகிய ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமானைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றோம். இந் நிகழ்ச்சியிற் பங்குபற்றினோர் படிப்போர் கேட்போர் அனைவரும் இன்புடன் நீடுவாழி! அனைத்துலகும் இனிது நீடு வாழி! வாழி!

---

வள்ளல்

## இராமநாதன் சைவம் வளர்த்த மாமேதை

"சென்னைச் சைவ சித்தாந்த சமாச வரலாற்றை ஆராய்ந்து வாசிக்கும் வாய்ப்பு எமக்கு அண்மையிற் கிட்டியபொழுது முன் ஒருமுறை அச்சமாசத் தலைவராகச் சொற்பெருக்காற்றிய வள்ளல் இராமநாதன் அவர்களின் சைவ சித்தாந்தப் பேரறிவைக் கண்டு களித்தேன். இராமநாதன் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி அனுபவித்த ஆண்டுகளில் இப்பெரியார் எவ்வாறு சைவசமய அநுட்டான நெறியை வளர்த்தார் என்பது புலனாயிருந்தது"

இவ்வாறு மல்லாகம் பிள்ளையார் கோயில் முன்றிலில் இராமநாத ஜயந்தி விழாவிற் சிறப்புரையாற்றிய பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கூறினர். பேராசிரியர் கலாநிதி இந்திரபாலா வள்ளலின் சமய உணர்ச்சியின் ஊற்றை அன்னாரின் சிந்தை, சொல், செயல் மூவகையிலும் எடுத்தாய்ந்து விதந்து பேசினர்.

சைவ சமயவிருத்தி சங்க ஆதரவில் நிகழ்ந்த இவ் விழாவுக்கு திரு. அ. சரவணமுத்து தலைமை தாங்கினார்.

பௌராணிகர் சிவத்திரு வ. குகசர்மா கவிதாஞ்சலி சமர்ப்பித்தார்.

---

### மது மயக்க மனிதர்

[புள்ளி விபரம் புகட்டும் செய்தி]

இங்கிலாந்து தேசத்தில் மட்டும் மதுவருந்துவதே தொழிலாயுள்ளவர்கள் தொகை 400000 என்று சொல்லப்படுகின்றது.

இன்னும் ஐந்தாண்டுகளில் இந்த 'மது மனிதர்' தொகை நான்கு மடங்காகி விடலாம் என்று ஊகிக்க இடமுண்டென்றும் கூறப்படுகின்றது.

ஆனால் மதுவைப் பொதுவாக உபயோகிப்பவர்கள் 40 00000 என்று கணிக்க முடியுமாம்.

மது நமது நாட்டில் எதுவிதம் என்று எடுத்துக்காட்டப் புள்ளி விபரம் எடுப்பவர்கள் இல்லைப் போலும், புள்ளிகள் வேண்டாம். துள்ள வைக்கும் குடிவகைப் பிடியிலுள்ளவர்களை மக்கள் தொகையில் நூற்றுக்கு எழுபத்தைந்து என்றால் மிகையாகாது.

சீர்திருத்தத் தொண்டர்களே சற்றுச் சிந்தியுங்கள்.

---

## 'சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்'

( வித்துவான் மு. கந்தையா B. A. )

'ஆரண நூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம்' என்பதனால் அருணந்தி சிவாசாரியார் ஆகமங்களைச் சைவம் என்று குறிப்பிடுகின்றார் என்று தெரிந்து கொள்கின்றோம். 'அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன் அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்' என்றதனால் திருமூலதேவர், ஆகமத்தைச் செய்தவர் சிவபரம்பொருள் எனவே தெரிவிப்பதைக் காண்கின்றோம். இனி இவ்விரண்டினையும் இயைந்து நோக்குங்கால், ஆகமமெனச் சொல்லப்பட்டது, எதுவோ அது சைவம்; அதைச் செய்தவர் யாவர் அவர் சிவபெருமான் என்னும் உண்மை இனிது புலனாகின்றது

இஃது இங்ஙனமிருப்ப, இச்சைவத்தைத் தோற்றுவித்தவர் யாவரெனில் ஒருவருமில்லை என்றேதான் கூறநேரிடும்' என்றால் அபவாதமேயன்றி அர்த்தவாதமாகாது.

நம்நாட்டில் பிரபல்யமான சைவ சஞ்சிகையொன்றில் 1-1-72இல் இதுவும் இதுபோன்றனவுமாக இடம்பெற்றுள்ள கூற்றுக்கள் சிலவற்றினைப் பூருவபக்கமாகக் கொண்டு எழுகின்றது இக்கட்டுரை.

'செய்வோரின்றிச் செய்வினையின்மையின்' என்பது விஷயநிச்சய வகையில் பிரபல்யமான ஒரு ஏதுவாகும். இவ்வேதுவிற் கெதிர்முகமாகச் செயப்படு பொருளாகிய சைவத்துக்குச் செய்தோரிலர் என்றல் பொருந்துமாறியாங்ஙனமோ?

சைவம் என்றாற் சிவசம்பந்தம் என்பது சர்வசம்மதமாக ஒத்துக்கொள்ளப்பட்டதொன்று. அதன் பிரகாரம், சிவனாலே தோற்றுவிக்கப்பட்ட ஆகமமும் அதனால் பிரதிபாதிக்கப்பட்ட சமயமும் சைவம் என்றே வழங்கலாயின. அவ்வாகமம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பிரிவினதாய் அமைந்ததாகலின் அந்நான்கும் சைவசமயத்தின் நால்வேறு பாதங்களாய் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே சரியை, கிரியைதான் சைவமென்றோ யோகம், ஞானம்தான் சைவமென்றோ மற்றெதுவுமல்ல ஞானம் மட்டுந்தான் சைவமென்றோ சாதிக்க முனைதல் ஏற்புடைத்தாதல் யாங்ஙனம்? மக்கள்பால் இயல்பாகவேயுள்ள மலபரிபாகத்தின் தாரதம்மியத்திற்கேற்ப ஆக அடிநிலையிலுள்ளோரையும் பயிற்றியெடுத்து ஞானமாகிய முடிநிலைக்குச் செலுத்தும் நோக்கில் இவை அமைந்துள்ளனவாதலின் இவற்றில் எதனையும் யாரும் புறக்கணித்தற்கு எவ்வித இயைபுமின்றாம். அஃதாவது ஆக அடிநிலையாகிய சரியையிற் சரியையுஞ் சைவமே. அதனையடுத்த சரியையிற் கிரியையுஞ் சைவமே. இங்ஙனம் படிமுறையாலேறும் நாற்பாத விரிவாகிய பதினாறுநிலைகளில் ஒவ்வொன்றுஞ் சைவமே. இது இங்ஙனமிருக்கையில், 'சைவம் என்பது ஒரு குறிக்கோளும் மனநிலையுமே தவிரச் சில சடங்குகள் அல்ல'. 'நின்னளந்தறிதல் மன்னுயிர்க் கருமையின் நின்னடி யுள்ளி வந்தனன்' என்ற உணர்வு வரும்பொழுதுதான ஒருவன் சைவனாக மாறுகின்றான்' என்ற கூற்றுக்களை அறிஞருலகு ஒத்துக் கொள்ளுமாறியாங்ஙனம்.

'நின்னளந்தறிதல்...... வந்தனன்' என்று திருமுருகாற்றுப்படை கிளப்பது சுத்த ஞானமேயாம். சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரத்து 'விட்டு அந்நியமின்மையின் அரன்கழல செலுமே' என வருவதும் இதுவும் சரிநிகர் சமானம். இவை தோற்றத்தில் இரண்டே தவிரத் தொடர்ச்சியில ஒன்றேயாம். திருமுருகாற்றுப்படை சாதாரணமான சாகித்திய இலக்கிய

( வளர்ச்சி 2-ஆம் பக்கம் )

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹு வைகாசிமீ க-உ வெள்ளி

## கொள்ளையும் கொலையும் கூடிக்கொண்டு வருவதென்ன?

நடுக்கிட வைக்கும் செய்திகளைத் தினமும் மக்கள் அறிந்து திகிலுறுகின்ற கலக்க நிலைமை உலகைக் கலக்கி வருகின்றது. சமயச் சால்புக் கிருப்பிடமாயிருந்த ஈழ நன்னாடும் இந்தக் கொடுமையின் பிடியில் அகப்பட்டுக்கொண்டு பழம்பெருமையை இழந்து போகின்றதென்றால் இந் நிலைமையை மாற்றுவதற்குச் சமய நெறியினின்றும் மக்கள் விலகிவிட்டார்களென எண்ணவேண்டியிருக்கிறது.

இப்பொழுது சில காலமாக இலங்கையில் எல்லாப் பக்கங்களிலும் நண்பகலில் மக்கள் நடமாடிக் கொண்டிருக்கும் வேளையிலே பகிரங்கமான வீதியில் உள்ள வங்கிகளிலே ஆயுதந் தாங்கிய கொள்ளைக் கூட்டத்தினர் கோடிக் கணக்கான விலை மதிப்புள்ள நாணயங்களையும் நகைகளையும் வலிந்து சூறையாடி வருகின்றார்கள். இந்தத் துணிவுள்ள திட்டர்களைத் துரத்திப் பிடிப்பதற்கு யாரும் முற்படுகின்றார்களில்லை பாடி காவலர்களும் பகலிரவாகத் துப்புத் துலங்க முயன்றும் தேடுதல்கள் சித்தியடைவதில்லை. இதன் மர்மம் என்ன? என்றுமில்லாத வகையில் இந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் அறைகூவி அடாத செயல்களை நிறைவேற்றி வைப்பதைத் தடுக்க முடியாமற் போனால் பாதுகாப்பு எங்கே! மக்கள் நிம்மதியாக வாழ்வதெங்ஙனம்?

இந்துசாதனத் தமிழ் - ஆங்கில இதழ்களிலே இந்த விபரீதத்தைப்பற்றிப் பன்முறை எடுத்துரைத்திருக்கின்றோம். வெள்ளித்திரையில் வெளியாகும் படங்கள் கும்பலான கொலையையும், கூட்டமான கொள்ளைகளையும் காம விகாரக் காட்சிகளையும் கட்டுப்பாடின்றி மக்கள் பார்வைக்கு வைக்கின்றன என்று அடிக்கடி சுட்டிச் சொல்லியுள்ளோம். இந்தப் பயங்கரச் சூழ்நிலையை அகற்றுவதற்குச் சமயநிலையங்களும், சமயாசாரிகளும் முற்படுவதே ஒரேயொரு வழி என்பதை மீண்டும் எடுத்தியம்புகின்றோம். கோயில் விழாக்கள், குருபூசைகள் ஏனைய நன்னெறி இயக்கங்கள் இவற்றுக்கிடையில் இந்நாடு துன்மார்க்கப் பாதையிலே செல்லுகின்றதென்றால் சமயநெறிச்சாதனை போதாதென்றே கூறவேண்டும்.

— ❧ —

## சிந்தனையைத் திருந்த வைத்துச்

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

மன்று. அது இலக்கிய வடிவிலான சைவ சாத்திரமே, சைவ தத்துவ ஞானத்தைத் தன்னுயிர்ப்பாகக் கொண்ட தனியான தமிழ்ப் பேரிலக்கியம். சங்ககாலத்துத் தமிழரிடைத் தத்துவஞானம் தளிர்த்திருந்தமை காட்டுஞ் சங்க இலக்கியம். அச்சிவஞானபோத எட்டாஞ் சூத்திரப் பொருள் ஏலவே இதன் 62ம் அடியிற் காலகோள் செய்யப்பட்டுள்ளது. 'சேவடி படருஞ் செம்மலுள்ள மொடு' என அது அங்கே சுவரூபித்துள்ளது. அடி 62இல் எட்டாம் சூத்திரமாகக் கால்கொண்டு 295 - 297 இற் பதினோராஞ் சூத்திரமாய் முடிசூடி நிற்கும் அதனருமை அறிவாரறிவுக் ககப்படாதொழியாதாம். 'இருணிற முந்நீர் வளைஇய வுலகத்

தொருநீ யாகத் தோன்றி விழுமிய
பெறலரும் பரிசில் நல்கும்'295 297

'இருண்ட நிறத்தையுடைய கடல் சூழ்ந்த உலகின் கண்ணே நீ பிறப்பும் இறப்புமின்றித் தம்மைப்போல் ஒருவனாக (சாட்குண்ய சம்பன்னனாக) விளங்கும் பொருட்டு (என்னை உன்னி யொன்றா விதித்தான்டருள தருங் காலமுண்டோ' என்றதற்கிணங்க) சிறப்பினையுடைய பிறராலே பெறுதற்கரிய திருவருளாகிய பரிசிலைத் தந்தருளுவர் — ஆறுமுகநாவலர் புத்துரை

இனி, குறித்த எட்டாஞ் சூத்திரத்து இக்கருத்தமையுஞ் சூழ்நிலையையும் திருமுருகாற்றுப்படை அடி 62 இன கருத்துச் சூழ்நிலையையும் சற்று ஒப்புநோக்குதல் சுவையுடைத்தாகும். (வளரும்)

கருத்துக் கட்டுரை

## சேர். பொன். இராமநாதனின் இணையிலாத்தொண்டின் இலட்சியம்

[செல்வி இரதி சிற்றம்பலம் மகாசனக் கல்லூரி 11-ஆந் தரம்]

(முன் வளர்ச்சி – 2)

சட்டப் படிப்பிற்கு அவையும், இலங்கைச் சட்டக் கல்லூரியும் தோன்றுவதற்கு இராமநாதன் ஆற்றிய பணியை யாம் எளிதில் மறக்க முடியாது. இவரின் விடா முயற்சியினாற்றான் குற்றவியற் சட்ட,குடியியற் சட்ட நடைமுறை கோவையாக்கப்பட்டது. இவற்றுடன் குடியியல் சேவையில் இலங்கையரைப் பெருமளவிற் சேர்ப்பதற்கும், அஞ்சல் சேமிப்பு வங்கிகளைத் திறப்பதற்கும் இவர் ஆற்றிய பணியையும் யாம் எளிதில் மறக்க முடியாது. சந்திரனை அடைய அமைக்கப் பெறும் புகைவண்டிப் பாதை (Railway to the moon) என்று பலரினால் எள்ளி நகையாடப்பட்ட போதும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு புகைவண்டிப்பாதை அமைப்பதற்குப் பெருங் காரணராய் விளங்கியவர் இராமநாதன் என்பதை நினைவிற்கொள்ளள வேண்டும்.

இராமநாதன் அவர்களின் ஆழ்ந்த சமயப் பற்றிற்கும் திராவிட சிற்பக் கலையில் அவர் உள்ளம் தோய்ந்திருந்த தென்பதற்கும் கொழும்பு கொச்சிக் கடையில் செங்கற் கோயிலாக இருந்த பொன்னம்பலவாணேசுவரர் கோயில், மிகப்பெரிய அளவில் கருங்கற் கோயிலாக்கி, திராவிடச் சிற்பக்கலைக் கூடமாக விளங்கச் செய்த அவரின் வியத்தகு பணி சான்றாக மிளிர்கிறது. "இலங்கையில் கலை வளர்ச்சி" என்று கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் எழுதிய நூல் இக்கோயிலின் சிறப்பை எடுத்து இயம்புகிறது.

திராவிட சிற்பக்கலையை வேற்று இனத்தவரும் கண்டு வியக்க பொன்னம்பலவாணேசுவரர் கோயிலைக் கொழும்பிற் கட்டி எழுப்பிய இராமநாதன் கொழும்பு கறுவாக்காட்டில் "சுகஸ்தான்" என்ற மாடமாளிகையில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த பெருமகன், சுகபோகம் அனைத்தும் கொழும்பிலே தான் உண்டென்று கருதவில்லை. தமிழ் இனத்தின் வருங்கால வாழ்வு எல்லாம் எம்மரபு வழித்தாயகமாகிய வடக்கிலும், கிழக்கிலும் தான் உண்டென்பதனை உணர்ந்து யாழ்ப்பாண மருதனாமடத்தில் மங்கையருக்கு இராமநாதன் கல்லூரியை 1913 லும் ஆடவருக்குப் பரமேஸ்வராக் கல்லூரியை 1919 லும் திருநெல்வேலியிலும் தோற்றுவித்த பெருமை இராமநாதன் அவர்களைச்சாரும். இலங்கைப் பல்கலைக் கழக இயக்கத்திற்கு வழிகோலியவர்களுள் இராமநாதன் அவர்களும் ஒருவர். ஆனால் இன்று அவரின் கனவு நனவாகியுளது. அவரின் எண்ணப்படியே பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாறியுளது.

இப்பெருமகன் மறைந்து நாற்பத்தாறு ஆண்டுகளாகின்றன. ஆண்டுகள் பல உருண்டோடியும் அவர் நினைவு எம நெஞ்சைவிட்டு அகல மறுக்கிறது. சேர். பொன். இராமநாதன் ஆற்றிய பணிகள் பல துறைகளில் விரிவடைந்து கிடக்கின்றன. அவர் தொடாத துறைகளில்லை, தொட்டுத் துலங்காத துறைகளுமில்லை.

தன் மூச்சுள்ளவரை எமது நிலைத்த நல்வாழ்விற்காகப்பாடுபட்ட இராமநாதனை இன்று எண்ணும் போது கூடக் கண்களில் நீர் பெருகுகிறது. இன்று இராமநாதன் மறைந்து 46 வருடங்களாகின்றன. ஆண்டுகள் எத்தனை சென்றாலும் அவரின் காலத்தால் சாகாத ஞாலத்தில் என்றும் நிலைத்து நிறகும பணியை நாமோ எம வருங்காலத் தோன்றல்களோ மறக்க நினைத்தாலும் மறக்க முடியுமா?

— முற்றும்

தில்லையம்பதி — சிய்யாளம்

## ஆலயத் திருப்பணி

தில்லையம்பதிக்கு தென் திசையிலுள்ள திருமயிலாடியில் புராதனகாவ ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி தேவஸ்தானத்திற்குக் கிழக்கே 6 பர்லாங்கு வரை தொலையிலுள்ள "சிய்யாளம்" என்ற சிற்றூரில் மகிமையுள்ள பெருமாள கோவிலிலிருந்து சுமார் 1500 ஆண்டுகளுக்குமுன் "கொள்ளடம்" என்ற நதியில் ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்கால் பெருமாள் கோவில் மறைவுபட்டு, கர்ப்பகிரகம் மட்டும் மூலவருடன் பழுதுபட்டு பெரும்மரம் செடி கொடிகள் அடர்ந்து, பாம்புகள் நிறைந்த புதருக்குள் மறைவுபட்டு யாருமே கவனியாமலிருந்து வந்தது.

பிருந்தாவனவாசியும் சிறந்த இராம பக்தருமான தவத்திரு. மகாத்மா ஹரிதாஸ் சுவாமிகள் சொப்பனததில் ஸ்ரீ வெங்கடாசலபதி தோன்றி பெருமாள் கோவில் மறைவுபட்டிருக்கும் ஊரையும், ஸ்தலத்தையும கூறினர். உடனே தவத்திரு. சுவாமிகள் ஸ்தலத்தை தேடிக்கொண்டு சிய்யாளம் கிராமம் வருகை புரிந்து மறைவுபட்டிருந்த பெருமாள் கோவிலைக் கண்டுபிடித்து மரம், செடி, கொடி, புதர்களை, அப்புறப்படுத்தி கர்ப்பகிரகத்தையும், அதனுள 4 அடி வரை உயரத்திற்குமேல் பெருமாள கிழக்கு நோக்கி காட்சி அளிப்பதையும் கண்டிபிடித்து, ஸ்ரீ வெங்கடாசலபதி தன் சொப்பனத்தில் கூறியவைகளை நிறைவுபடுத்த அயராதுழைத்து வந்தனர்.

தில்லையம்பதியிலுள்ள யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் அறநிலைய அறங்காவலர் குழுவிற்கு சென்னையிலுள்ள பச்சையப்பன் அறநிலைய அறங்காவற் குழுவினர் சிதம்பரத்திலுள்ள உயர்திரு. ஆர். கனக சபைப்பிள்ளை அவர்களை (ஸ்ரீ நடராஜப்பெருமான் திருக்கோயில் திருப்பணிச் சபையின் தலைவர்) மூன்று ஆண்டு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்களென்று, அறநிலைய நற்பொறுப்பாளா உயர்திரு க இராசேசுவரன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

( நமது நிருபர் )

## சேக்கிழார் சுவாமிகள் கண்ட தமிழகமும் இல்லறமும்

[ செ. சின்னத்துரை இளைப்பாறிய ஆசிரியர் ]

( முன் வளர்ச்சி - 8 )

மேல்நாட்டாரின் ஆட்சி விலகி அனேக ஆண்டுகள் சென்றுவிட்டன. ஆனால் அவர்கள் விட்டுச்சென்ற சீர்கெட்ட நாகரீகவலையில் எம் நாட்டவர் சிக்கியுள்ளனர். உடை, நடை; பாவனை பெரும்பாலும் சமுதாயத்தில் மாறுதல் அடைந்துள்ளன. ஆடம்பர சீவியம்தான் மக்களின் சாந்தியைக் குலைத்துவிட்டது. இளைஞர்கள் கால்சட்டை அணிந்துகொண்டு அங்கும் இங்கும் பவனிவரும் காட்சி மலிந்துளது. உத்தியோகத்தில் இருப்போர் கால்சட்டை அணிவதில் பிழையில்லை. சுதந்திரம் வேண்டும் சுதந்திரம் வேண்டும் என்று பல ஆண்டுகளுக்கு முன் குரல் எழுப்பினர் பலர். ஆனால் உடை; பாவனை முதலியவற்றில் நாம் அடிமைகள் ஆகிவிட்டோம். மேல்நாட்டாரின் நற்பண்புகளை நாம் பின்பற்றலாம் ஊக்கமுடைமை எதையும் நேரத்திற்குச் செய்தல், கருமமே கண்ணாயிருத்தல் முதலிய சிறந்த செயல்களை நாம் பின்பற்றலாம். ஆடம்பர வாழ்க்கையைக் குறைத்தாற்றான் நல்ல தூய அகவாழ்க்கை செழிப்புற்று வளரும். மக்களின் மனம் தூய்மை அடைய வேண்டும். மனக்கொந்தளிப்பு குறையவேண்டும். எந்த வழியாலும் பணம் வந்தாற் போதும் என்று நூற்றுக்கு தொண்ணூறு பேர் நினைக்கிறார்கள். தர்மவழியில் பணத்தை சம்பாதிப்பவர்கள் நம்மவரில் சிலரிற் சிலராகும். சீதன வழக்கம், மதுபானம் அருந்தும் தீயவழக்கம், கைலஞ்சம் வாங்கும் பழக்கம், வரவுக்கு மிஞ்சிச் செலவழிக்கும் பழக்கம் முதலியன சமுதாயத்தைச் சீர்குலைத்துவிட்டன. இனி நாம் புதியதொரு சமுதாயத்தை உருவாக்கவேண்டுமானால், இல்லறம் நல்லறமாகத் திகழ வேண்டுமானால், கணவன்-மனைவி கருத்தொருமைப்

(வளர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய
# திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலயபாண்டியனூர் அவர்கள் —

( முன் வளர்ச்சி — )

## நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே

உரை : பேயுமுட்பட உயுரெல்லாந் துஞ்சுகின்ற நள்ளிருளிலே தனித்துத் தாளத்திற்காடுந் தனியாடலை ஆடிப்பயிலுகின்ற பெருமானே !

நட்டம் : தாளத்திற்காடுந் தனியாட்டம். இதனைத் தமிழ்ச் சொல்லெனக் கொண்டு நடப்படுந் தடிபோல நின்றாடுதலை நட்டமென்றாரெனக் கொள்க, அம்மிருதிநிலை செயப்படு பொருள் மேற்றாகலின் நட்டமென்பது நடப்படுவதென்னும் பொருட்டாய்த் தடியையுணர்த்தும் அம்மிருதிநிலை செய்யப்படு பொருள் மேற்றாதல் இட்டம் தேட்டமென்பவற்றிற் காணப்படும். வடமொழியினும் அப்பொருள்படும் பெயரானே நின்றாடலை வழங்குப. நட்டமென்பது நடப்பட்டதடி நிற்றலை யுணர்த்திப் பொருளாகு பெயராய் அவ்வாகு பெயர் பின் ஒப்புணாகு பெயராய்த் தடிநிற்றல்போல நின்றாடலை யுணர்த்தி நின்றது. நட்டமாய் நின்றானென வழக்கின்கண்ணும் இருமடியாகு பெயராய் வழங்குமாறு காண்க; நட்டமென்பனை வடசொற்சிதைவென்பாருமுளர்.

இந்நட்டஞ் செய்தியாடலன்று; களியாடலெனம்படும் காண்பரின்றித் தானேயாதலின்,

இறைவன் இதனைப் பிறர்காண்டற்கன்றித் தனக்குத்தானே தனித்து நின்றாடுதலின் இதனை ஆடிப்பழகுதலென்றார்; ஆடிப்பழகுவார் பிறர்காண்டல் பேணார்,

ஆடிப் பயிலுமென்லுந் தொடர் பயின்றாடுமென மாறி மொழியுறுப்புப் பிரிந்து கூடி நின்றது.

நள்ளிருளென்ற நீண்டுச்செஞ் சொலன்று, குறிப்புச்சொல். விழிப்புக் கனவு முதலாய ஐவகைப்பாடுகட்குமப்பாலை யுணர்தலின் அந்நிலையிளிகழும் அவன்றன் அளவிலின்பத்தைக் குறிக்கு நட்டமும் புனைச்செய்தியாதலுணர்க, அந்நிலையில் அவனானல்ல தில்லாமையின் அவ்வாடல் ஆடிப்பயிலுதலென்றதா - மமையுமாறு காண்க,

அவ்வாடல் காட்டியேதம்மை இறைவன் ஆட்கொண்டானாகலின் அவனை நாதனென்றார்,

> " தில்லையுட் கூத்தனே ! தென்பாண்டி நாட்டானே !
> அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
> சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
> சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
> செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
> பல்லோரு மேத்தப் பணிந்து "

உரை : தில்லையு ளாடுந் திருக்கூத்தனே ! தென்பாண்டி நாடுடையானே ! எவ்வுயிர்க்குந் துன்பமேயான பிறப்பைக் கெடுப்பவனேயோ வென்று சொல்லிச் சொல்லற்கரிய வொருவனை அவனது திருவடிக்கீழ் நின்று சொல்லிய பாட்டுக்களின் பொருளறிந்து அப்பொருளைப் பிறர்க்கெடுத்துச் சொல்லி அவரை நெறிப்படுத்தும் அறவாணர் இம்மையிலே திருவுடையர். அம்மையிலே சிவவுலகிற் சிவபுரத்திற் சிவத்திருவாளர் பலருந் தம்மைப் பணிந்து வழுத்தாநிற்கச் சிவனடி நீழலிற் குளிர்ந்து களித்தின்புற் றென்றுமொன்று மீளாது வாழும் விழுச் செல்வராவர். அவர் வாழ்க, அவர் வாழ்கவென் வெளிறது இசையெச்சம். அம்மையே சிவலோகமாள்வதற்கியாது மையுறவில்லையே யென்ற ஆளுடைய நம்பிகள் கூற்றும் ஈண்டு நினைக்கத்தக்கது;

தில்லைக்கூத்து அன்றக் கூத்தன்றி அங்களிக்கூத்தன்றிப் பொருட் கூத்தாதலானம், அம்பலக்கூத்தாதலானும் தில்லைக் கூத்தன் உலகிற் கூத்தரெல்லாரினும் விஞ்சிய கீர்த்தியுடையனாகலானும் அவரெல்லார்க்கு முதல்வனாகவானுந் தில்லைக் கூத்தனெனவேறெடுத் தோதினார்.

கூத்தனாயினும் ஏனைக்கூத்தர்போல இரவலனல்லன் புரவலனென்பார் தென்பாண்டி நாடுடையானென்றார். தென்னாடுடைய சிவனென்பர் மேல். இதனால் பண்புகழ் மூவர் தண்பொழில் வளர்ப்பென்றது முடியாட்சிபற்றிக் கூறியதாகலின் இறையாட்சியிலுங் குடியாட்சியிலும் அவ்வேற்றுமையின்றித் தமிழகமென்வொன்றுதல் பற்றிச் சோழநாட்டுத் தில்லைக் கூத்தனைத் தென்பாண்டிநாடுடையானென்றாரென்பதும் பெறப்படும்,

— தொடரும்

## சைவ பரிபாலன சபை — யாழ்ப்பாணம்

சித்தாந்தத் தேர்வுகள் : 1976.

பரீட்சை நடைபெறுங் காலம் : 24—12—76 முதல் 26—12—76 வரை.

விண்ணப்பிக்கும் இறுதி நாள் : 31—8—76.

குறிப்பு :— பரீட்சைப் பாடவிதானம் கடந்தகால வினாப் பத்திரங்கள், பரீட்சைக்குரிய பாட சம்பந்தமான குறிப்புக்கள் இந்துசாதனப் பத்திரிகையில் காலம்தோறும் வெளிவரும்.

450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம், 8-4-76.

வ. கந்தசாமி,
தேர்வுச் செயலாளர்


## மணப்பெண் மாப்பிள்ளை

பொருத்தமுள்ள திருமணங்கள் ஒவ்வொருவரும் தமக்கு ஏற்ற மிகச் சிறந்த அநேக பொருத்தம் உள்ளவரை அறிந்து பெற அரிய வாய்ப்பு. எம்மிடம் வரும் பல விண்ணப்பங்களில் உள்ள முழு விபரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து திருப்தியாகக் கண்டதற்கு நகல் அனுப்பலாம். பின் அவரவர் அனுமதி பெற்று பெயர் விலாசமும் தரலாம். சிரமம், செலவு குறைவு இரகசியம், நேர்மை, உண்மை உள்ள ஒழுங்குகள் தூய்மையும், நன்னோக்கமும் பாதுகாக்கும் பொருட்டு உரிமைப்படுத்தப்பட்ட முறை தனி மனிதனிலிருந்து சமூக நலனைப் பேணும், இலாப நோக்கமில்லாத இயக்கம். குறைந்தது 3 × 15 சத முத்திரைகளுக்கு விபரமும் மனுப்பத்திரமும் கிடைக்கும்,

சர்வ உதய சேவை,
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.


உ
சிவமயம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடாத்தும்

## சித்தாந்தத் தேர்வுகள்.

### 1974—1976 தேர்வு விதிகள்

( முன் வளர்ச்சி — 6 )

### சித்தாந்த பாலபண்டிதர்

உரை நடை
1. கந்தபுராண நவநீதம் -- செந்திநாதையர் (யா. கூ. த. ப, சமக வெளியீடு)
2. திருவிளையாடற்புராண வசனம் ( நாவலர் )
3. திருவிளையாடற்புராண வசனம் (நாவலர்)
4. நாவலர் சரித்திரம் ( கனகரத்தின உபாத்தியாயர் எழுதியது : நாவலர் நூற்றாண்டுச் சபை வெளியீடு)
5. சைவத் திருக்கோவிற் கிரியை நெறி
அதி 6 கிரியைகள் : அதி 7 பரிவாரத் தெய்வங்கள்: அதி 8 கிரியைகளில் உட்பொருளும் உயர் நோக்கும் :-
கா. கைலாசநாதக் குருக்கள் M A. Ph; D,

### சித்தாந்த பண்டிதர்

1) இலக்கியம் :
1. திருக்குறள் 64—133 அதிகாரங்கள் பரி - உரை
2. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - உரை
3. தாயுமானவர் பாடல் - பரசிவ வணக்கம் 10 பாடல்கள்
4. கந்தபுராணம் : (1) உற்பத்திகாண்டம் 1—100 வித்துவான் ந. சுப்பையபிள்ளை
   (2) தக்ஷகாண்டம் : பண்டிதமணி சி. க. உரை
5. சைவசமயநெறி நாவலர் உரை

(தொடரும்)

உ
விநாயகர் துணை

வண்ணை

### ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவிலினதும்
(பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவில்)

### துவாதசி மடத் தருமத்தினதும்
தர்மகர்த்தா சபை

1-4-75 முதல் 31-3-76 வரை

### வரவு — செலவு விபரம்

| | ரூ. ச. | | ரூ. ச |
|---|---|---|---|
| முன் கையிருப்பு: | 72 - 62 | பூசகர் | 350 - 00 |
| சந்தா | 360 - 00 | பலப் | 32 - 95 |
| உண்டியல் | 329 - 05 | மரம் பார்த்த கூலி | 36 - 75 |
| | | மின்சார வரி | 141 - 20 |
| | | மின்சார உபகரணம் | 15 - 00 |
| | | பூட்டுகள் | 57 - 00 |
| | | பொதுச் செலவு | 29 - 10 |
| | | கையிருப்பு | 99 - 67 |
| | 761 - 67 | | 761 - 67 |

சி. சோமசுந்தரம்
தலைவர்

வ. கந்தசாமி
கௌரவ செயலாளர்

வி. எஸ். இராமநாதர்
கௌரவ பொருளாளர்

வெ. சுந்தரராஜா
கணக்குப் பரிசோதகர்
19. 4. 76

## சேக்கிழார் சுவாமி

2 ஆம் பக்க வளர்ச்சி

பட்டு வாழவேண்டும். பணம் கல்ல அந்தஸ்து முதலியன மாத்திரம் நல் வாழ்வைத் தரும் என்று நினையாது. குலம், குணம் முதலியன வற்றை மேலாகச் சீர்தூக்கி விவாகங்கள் நடைபெற வேண்டும்.

வீடுகளில் இராமாயணம், பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் படிக்கப் படவேண்டும். இவை வசன நூல்களாகவும் உள்ளன. வீட்டில் ஒருவர் வாசிக்க மற்றவர்கள் கேட்கும் சிறந்த பழக்கம் எம்மத்தியில் உருவாக வேண்டும். இராமாயணம், மகாபாரதம் உலக வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை. இந்நூல்கள் யாழ்ப்பாணத்தில் முன்னொருகால் பல வீடுகளில் படிக்கப்பட்டன என அறிகிறோம், வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் அடக்கிய இதிகாசங்களையும் புராணங்களையும் செவிவாய்க் கேட்டும் தெய்வத்தன்மை வாய்ந்த திருமுறைகள், ஞானசாத்திரங்கள் முதலியவற்றைக் கேட்டாயினும், கற்றாயினும் மக்கள் இத்தகைய பண்பாட்டில் மனதைத் தோய வைத்து வாழ வேண்டும். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி நன்னெறி முதலிய நீதி நூல்களை யாவரும் கற்கவேண்டும். இவற்றைப்பற்றிய பிரசாரங்கள் கிராமங்கள் தோறும் எழுச்சியடைய வேண்டும். இத்தகைய பண்பாட்டில் உள்ளம் ஊறிய மக்களைக்கொண்ட சமுதாயத்திற்றான் நற்குண நற்செய்கை, நற்சிந்தனையுள்ள பிள்ளைகள் தோற்றுவார்கள். மக்களின் மனம் தூய்மையடையவேண்டும் - தூய்மையுள்ள புலவன் மனத்திலேதான் சரஸ்வதி குடிகொள்வாள், (வளரும்)

### தில்லையம்பதியிற் சிவதொண்டு

தில்லையம்பதி ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ நடராசப் பெருமானிடத்தில் பெரும் ஈடுபாடும் சிறந்த பக்தி கொண்டுள்ளவருமான ஈரோடு (பார்க்சால் பூங்காவின் சமீபமுள்ளவர்) சிவபக்தர் உயர்திரு எஸ். கோவிந்தசாமி முதலியார் அவர்கள் சுமார் 10000 (பத்து ஆயிரம்) ரூபாய் செலவில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மை சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான் எழுந்தருளியுள்ள "கனகசபை" யை சுற்றிலும் கருங்கல் சுவரின் நான்கு பக்கமும், ஸ்ரீ இலக்குமி அம்மன் கோயிலில் "கண்ணாடி அறை" முன்பக்கமும் பளிங்கு நிறக் கற்களைப் பதிய வைத்து அழகுபடுத்தியுள்ளார். மேலும் உயர்திரு கோவிந்தசாமி முதலியார் அவர்கள் 5000 (ஐந்து ஆயிரம்) ரூபாய் செலவில் "கனகசபை" யின் மேல்— கீழ் பக்கங்களிலுமுள்ள நுழைவாயில்களின் படிகளின் பக்கமுள்ள சுருள் மகாயானங்கள் நான்குக்கும் (அழகாக கருங்கற்களால் செய்துள்ளது) பித்தளை தகடுகளால் கவசங்கள் செய்து பதியவைத்து அழகுபடுத்தியுள்ளார். —— (ரு. தி),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

விளங்கொளி அங்கி விரிகதிர் சோமன்
துளங்கொளி பெற்றன சோதி அருள,
வளங்கொளி பெற்றதே பேரொளி வேறு
களங்கொளி செய்து கலந்து நின்றானே.

The flaming fire, the sun possessed of expanding rays and the moon, — they all got their glittering light by the Grace of the lustrous Lord, the Supreme Light that provided them with their limited luminosity and mingled with them (Adwaitha relationship).

Hindu Organ

FRIDAY, MAY 14, 1976

## Priority for Public Causes

THERE are quite a number of schemes for renovation of shrines, resting places and similar sacred institutions. In the same manner new temples are being consecrated. All these causes are essentially for the cause of public welfare. Hence the appeal for financial assistance is also made to the people. Thus the 'subscription lists' have become a continuing request for charitable gifts. After all charity is said to begin at home. Therefore the plea for public aid is certainly pertinent. But there is one inconvenient circumstance that tends to make the donor fight shy of these 'lists'. All appeals are made simultaneously! It is in this context that in our earlier issues we had suggested the pooling of public resources and commended the idea of a really representative Saiva Organization drawing up a scheme for the staggering of subscription lists.

The Central Organization must prepare a list of priorities and assign definite periods for the call on the public for funds. Such a scheme will help the speedy realization of the objects of these appeals. In course of time almost all of the renovation plans would have been completed. A carefully planned campaign will ensure larger contributions from donors.

The Saiva way of life gives ample scope for the development of the sense of philanthropy in every individual. The tradition amongst Saiva devotees has been the maintenance of a charity counter that collects daily the spontaneous gifts of the family. This charity counter is a permanent savings bank from which funds are drawn as occasion demands. Here is a thoughtful scheme that will enable every single person contribute to public causes without being subjected to undue stress.

Righteous causes have always commanded the collaboration and co-operation of all right-thinking people Dharma Shastras and codes of moral conduct require the donors to distinguish the genuine cause from the rest.

We commend this suggestion to the Saiva Organizations of this country for consideration

## SAGE AND SAVANT

The death of Mr. K. Ramachandra, Founder and Hony. Editor of the "Religious Digest" and the "Atma Jothy", removes from this plane of earthly existence one of Sri Lanka's modern sages and savants. He was a beacon light guiding and inspiring us at all times in several fields of activity.

He was a versatile scholar and was a dynamic individual. The organisers of many recognised international Religious Conferences did him the honour of inviting him to give discourses, and he amply justified their expectations. In our own country, an appreciative public celebrated his birthdays by holding very warm and spontaneous receptions in honour of one of the noblest sons of Sri Lanka organised and conducted by representatives of all communities and giving handsome and grateful praise to his valuable and disinterested services of a dispassionate character and of a unique nature. He was a prophet honoured both in and out of his motherland during his life.

Clad in vertie and shirt, both white, his was a life of high thinking and plain living. His abode aptly named "Ramana Manthiram" was like a shrine, and actually served that purpose for decades for a large number of devotees of several religions. He was a highly evolved person of spiritual stature attained through deep study, meditation, religious practices, selfless service and a sense of utter dedication.

He possessed public spiritedness and devotion of a lofty nature to the country, hard to find. He was solicitous of the personal welfare, and religious and cultural advancement of those who came into contact with him and of the society as a whole. Innumerable religious, cultural and public causes commanded his deep allegiance from the days of his youth. Among the many institutions with which he was connected are: Sri Ramakrishna Mission (Sri Lanka Branch), Tiruketheeshvaram Temple Restoration Movement, Vivekananda Society (Colombo), Hindu Religious Affairs Advisory Board, Sat Sangam (Colombo) and Eelaththu Sivanadiyar Thirukkootam. His final act of public service, just prior to his death, was the preparation to hold the 80th birthday celebration of Shree Anandamayee Ma, one of the great lady saints still among us, at the Sri Ramakrishna Mission Hall, Wellawatte, on 9th May 1976. Till his last moment, he had the good and rare fortune to continue to work for the transcendent ideals he espoused in a degree which has been given to few mortals. In accordance with one of the aims in the life of a Hindu devotee, and also as wished for by him in his lifetime, he passed away peacefully, quite suddenly and unexpectedly, without suffering and without discomfort to himself or to others. Regarding death itself, he used to quote the following saying from the Hindu scripture and believed in it fervently:-

"The atman is neither born no does it die.... as a man casting off worn out garments puts on new ones so the embodied casting off worn out bodies enters into others that are new"

He was staunchly wedded to the cause of universal brotherhood of man, the oneness of all living beings, goodwill between nations, religions, countries, communities and races in a very remarkable measure. He naturally stood for inter communal and inter religious harmony in Sri Lanka, and the unity of the country.

His benign influence was reflected in his pious wife Madam Sinnathangam and devoted children, all of whom (sons and daughters and their spouces) have proved worthy of the illustrious head of the family. Among his sons are Dr. Pararajasegaram, the eminent Eye Surgeon and Mr. Sundaralingam, the well-known Superintendent of Police.

The large and representative gathering drawn from all walks of life, creeds and communities present at his residence and at the cemetery was a token of the love and respect for a great soul.

May Lord Shiva's blessings be with this faithful servant of God. May Providence vouchsafe to the country at all time persons of his calibre for the benefit of the country.

S. Sivasubramaniam
Attorney-at-Law
and
T. Sivasubramaniam
Railway Officer

## The Aims and ideals of Sir Ponnambalam Ramanathan

By

V. MUTTU CUMARA SWAMY

(Continued from last issue)

The chief aim of the Parameshvara College was to save our boys in this way and to make good citizens of them. This has recently become the Jaffna Campus of the University of Sri Lanka— where we found a seat for the study of Hinduism and Hindu Culture — the only one in the East.

Sir Ponnambalam Ramanathan was the chief force behind the Hindu Board of Education which was founded on 9th December 1923. The proposal to incorporate the Hindu Board of Education was brought on August 26, 1926. It was called "Shaiva Vithiya Viruthi Sangam" in Tamil and translated into English as Hindu Board for the Promotion of Education and was passed on November 25, 1926. Ramanathan shouldered the burden of establishing schools throughout the length and breadth of the Jaffna Peninsula and elsewhere in the Island, until his death in 1930.

Ramanathan's Riot and Martial Law in Ceylon, will give a glimpse of his eloquent marathon speeches defending the Sinhalese—against the bureaucracy of the British rulers.

Early in 1904 Ramanathan concentrated his attention on rebuilding the Sivan Temple built by his father, in granite. It has been entirely built in granite; a pyramidal structure, "Gopuram" has recently been built.

It was Ramanathan's aim to run a Tamil School in the temple premises and also a school for teaching Brahmin priests. This school was run for a short period and closed later.

It is interesting to recall that Ramanathan had conceived the ideal of founding a National Buddhist — Hindu College in Colombo in 1890, that would be a model for other institutions. But the Buddhist leaders did not agree. So Ramanathan gave up that idea. The Buddhists founded Ananda College, Colombo.

Sir Ponnambalam Ramanathan in a memorandum to the Donoughmore Constitution raised the question 'What is nationhood?' and gave an answer.

(To be continued)

வரன்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday May 14, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org